[2010 ஜனவரி 9

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *11-1-2010 திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 11-1-2010, திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*11-1-2010 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 11-1-2010 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*25. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டு விளையாட்டை முறைப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2009)*

*26-8-2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் நாளாக இருக்கும் என நிர்ணயித்தது குறித்து கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(காப3)த் துறையின் 26-8-2009 ஆம் நாளிட்ட 99 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டு விளையாட்டை முறைப்படுத்துதல் சட்டத்தின் 11(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*26. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டு விளையாட்டை முறைப்படுத்துதல் விதிகள் இயற்றியது குறித்து கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(காப3)த் துறையின் 26-8-2009 ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டு விளையாட்டை முறைப்படுத்துதல் சட்டத்தின் 11(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*27. யாதொரு வணிகர், சொந்தப் பயனுக்காக மின் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களின் பயன்பாட்டிற்காக 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) கீழ் பதிவு செய்த தொழிலக நுகர்வோர்களுக்கு உலை எண்ணெய் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை மற்றும் கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 29-9-2009 ஆம் நாளிட்ட 146 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*28. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாய நீதிமன்ற அலுவலர்/தலைவர் அவர்களை மதுரையில் உள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினராக (நீதி முறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் 10-7-2009 ஆம் நாளிட்ட (2டி) 153 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*29. பூந்தமல்லி சார்நிலை நீதிபதி அவர்களை மதுரையில் உள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின்*

(கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினராக (நீதி முறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் 20-10-2009 ஆம் நாளிட்ட (2டி) 219 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

30. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1) துறையின் 10-9-2009 ஆம் நாளிட்ட 130 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

31. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1) துறையின் 17-9-2009 ஆம் நாளிட்ட 141 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

32. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண வசூலை முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/2009) 7-12-2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் நாளாக நிர்ணயித்தது குறித்து பள்ளிக் கல்வி (எக்ஸ்2)த் துறையின் 7-12-2009 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண வசூலை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2009) 16(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

33. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண வசூலை முறைப்படுத்துதல்) விதிகள் இயற்றியது குறித்து 7-12-2009 ஆம் நாளிட்ட 319 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண வசூலை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2009) 16(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

34. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/2008) 17-3-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் (தேர்தல்) துறையின் 17-3-2008 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*35. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/2008) 25-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 25-6-2008 ஆம் நாளிட்ட 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*36. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (மூன்றாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/2008) 25-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 25-6-2008 ஆம் நாளிட்ட 117 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

*37. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (ஆறாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/2008) 25-6-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிர்வாகம்*

மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 25-6-2008 ஆம் நாளிட்ட 118 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

38. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

39. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

10. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2009-2010)

11. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஆறாவது அறிக்கை. (2009-2010)

12. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஏழாவது அறிக்கை. (2009-2010)

---